

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2023) திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 91–வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் மனைவி திருமதி வீ. மோகனா அம்மையார் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## நீட் விலக்குக்கோரி

# 55 லட்சம் கையெழுத்து !

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, டிச.3–

நீட் விலக்கை வலியுறுத்தி, தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 55 லட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த கையெழுத்து நீட் விலக்குப் பெறுவதற்கு அடித்தளமாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (02.12.2023) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்து பெற்றார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக இளைஞரணி 2 வது மாநில மாநாடு நடைபெறும் பணிகளை அமைச்சர் முத்துசாமி, கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். அருகில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் பாபு (எ) வெங்கடேஷ்வரன், வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




